**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, தஞ்சாவூர்.**

**முன்னிலை: செல்வி. S. T. கனிமொழி, L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.I,**

**தஞ்சாவூர்.**

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாள் புதன் கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை திங்கள் 16 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.50/2021**

CNR NO.TNTJ05-000567-2021

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,

நகர கிழக்கு காவல்நிலையம், தஞ்சாவூர்.

குற்ற எண்.81/2021. .....குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1) கார்த்திகேயன், வயது 34/2026, த/பெ. முனியாண்டி,

முதல் தெரு, அண்ணா காலணி, தொல்காப்பியர் சதுக்கம், தஞ்சாவூர்.

2) ஹரிபிரபு, வயது 27/2026, த/பெ. மனோகர்,

கம்பி பாலம், தொம்பன்குடிசை, தஞ்சாவூர்.

(இவ்வழக்கின் 1 வது எதிரி கடந்த 24.03.2026 அன்று சிசி எண்.209/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார்) ....எதிரிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 08.03.2021 அன்று சி.சி.எண்.50/2021 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 29.04.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டதில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. J. மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....,

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:03:45 +0000

## தீர்ப்புரை

**I) குற்ற அறிக்கையின் சுருக்கம்-**

கடந்த 24.01.2021ம் தேதி 09.30 மணிக்கு வாதி சுபாஷினி தஞ்சாவூரில் உள்ள விஜயமண்டபத்தெருவில் வசிக்கும் தனது சித்தப்பா ரகுராமனுக்கு 25.01.2021ம் தேதி 60 வது திருமணம் நடக்க இருப்பதால் சௌராஷ்டிரா மேலராஜ வீதிக்கு தொல்காப்பியர் சதுக்கத்தில் இருந்து ஆட்டுக்காரத்தெரு ஜெயபால் மளிகை கடை அருகே நடந்து வரும்போது இரவு சுமார் 09.40 மணியளவில் வாதிக்கு எதிரே TN-49-AK-3907 என்ற பதிவெண் கொண்ட Splendor Pro கருப்பு சிகப்பு நிறமுடைய இருசக்கர வாகனத்தில் வந்த 1வது எதிரி பின்னால் அமர்ந்தும், 2 வது எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்டி வாதி அருகில் வந்தபோது 1வது எதிரி வாதி கழுத்தில் இருந்த 3-1/2 பவுன் தங்கசெயினை அறுத்து வாதிக்க பொருள் இழப்பை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, தஞ்சாவூர் நகர கிழக்கு காவல்நிலைய காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது இதச பிரிவு. 392 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

II) இந்நிலையில் வழக்கு விசாரணையின் போது இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் போதிய அவகாசம் கொடுத்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் குற்றம் பற்றி விளக்கிக்கூறி வினவப்பட்ட போது அவர்கள் குற்றத்தை மறுத்துள்ளார்கள். ஆவணங்களின் அடிப்படையில் கு.வி.மு.ச. பிரிவு 240(i)ன் கீழ் குற்றம்சாட்டப்பட்ட எதிரிகள் மீது இதச பிரிவு. 392 ன் கீழான குற்றச்சாட்டு வனையப்பட்டு, குற்றச்சாட்டை விளக்கிக் கூறி வினவிய போது குற்றம்சாட்டப்பட்டவர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றார்கள்.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:03:52 +0000

எனவே அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு வழிவகை செய்யப்பட்டது.

III) இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அ.சா.8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் மற்றும் அசாபொ.1 முதல் 3 சான்றுப்பொருள்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

IV) இந்நிலையில் இவ்வழக்கின் 1வது எதிரி கடந்த 24.03.2026 அன்று சிசி எண்.209/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார். அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 2வது எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து 2வது எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(பி)ன் கீழ் வினவியபோது 2வது எதிரி அதனை மறுத்து கூறி 2வது எதிரி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

V) அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம் செய்யப்பட்டது என்றும், அரசு தரப்பு சாட்சிகள் அதற்கு ஆதரவாக உள்ளது என்றும், எனவே எதிரிக்கு உரிய தண்டணை வழங்க வேண்டுமென வாதிட்டார். மாறாக, எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 தனது முதல் விசாரணையிலேயே எதிரிக்கு எதிராக எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த குற்றச்சாட்டில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார் .

VI) **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவு 392 IPC-ன் படியான குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?**

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:03:58 +0000

**என்பதேயாகும்.**

VII) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

VIII) இவ்வழக்கில் கடந்த 24.01.2021ம் தேதி இரவு 09.40 மணியளவில் வாதி சுபாஷினி தஞ்சாவூர் ஆட்டுக்காரத்தெரு ஜெயபால் மளிகை கடை அருகே நடந்து வரும்போது எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் வாதி கழுத்தில் அணிந்திருந்த 3-1/2 பவுன் தங்கசெயினை அறுத்துச்சென்றுள்ளார்களா? என்பதை ஆராய்கையில்,

1. அரசு தரப்பில் புகார்தாரர் சுபாஷினி அசா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது முதல் விசாரணையில், "கடந்த 24.01.2021 அன்று தானும் தனது கணவரும் கும்பகோணத்தில் இருந்து இரவு 7.00 மணிக்கு தஞ்சாவூர் இரவு 9.00 மணிக்கு வந்ததாகவும், இங்கிருந்து தன் அம்மா வீட்டிற்கு செல்வதற்காக தொம்பன் குடிசை பஸ் நிறுத்தத்தில் இறங்கியதாகவும், அங்கிருந்து ஆட்டுக்காரத் தெருவிற்கு நடந்து சென்றுகொண்டு இருந்ததாகவும், பைக்கில் இரண்டு நபர்கள் தனக்கு முன்பாக வேகமாக வந்ததாகவும், அதில் ஒரு நபர் தன் கழுத்தில் அணிந்திருந்த 3-1/2 பவுன் தங்கச்செயினை பறித்து சென்றுவிட்டதாகவும், தான் சத்தம் போட்டதாகவும், அவர்கள் வேகமாக சென்றுவிட்டதாகவும், அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அங்கு வந்துவிட்டதாகவும், தன் கணவர் செயின் பறித்தவர்களை துரத்தியதாகவும், ஆனால் அவர்கள் தப்பிவிட்டதாகவும், ஆஜர் இரண்டு எதிரிகள் தான் இருசக்கர வாகனத்தில் வந்ததாகவும், அதில் இன்று பச்சை நிற சட்டை அணிந்து இருப்பவர் 1வது எதிரி தன் கழுத்தில் இருந்த செயினை அறுத்ததாகவும், பின்னர் மறுநாள் கிழக்கு காவல் நிலையம் சென்று புகார் அளித்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், அந்த புகார் மனுவை தனது கணவர்

S T KANIMOZHI
Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:04:04 +0000

எழுதியதாகவும், 10 நாட்கள் கழித்து நகை கிடைத்துவிட்டதாக போலீசார் தகவல் தெரிவித்ததாகவும், தான் காவல்நிலையம் சென்று தனது நகையை அடையாளம் காண்பித்ததாகவும், பின்னர் தான் நீதிமன்றத்தில் மனு அளித்து இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.1ன் சாட்சியத்திலிருந்து கடந்த 24.01.2021 அன்று இரவு 09.00 மணிக்குமேல் அசா.1ன் கழுத்தில் அணிந்திருந்த 3-1/2 பவுன் தங்கச்செயினை எதிரிகள் அறுத்து சென்றுள்ளார்கள் என அறியமுடிகிறது.

2. மேலும் அசா.1ன் குறுக்கு விசாரணையில் "தான் காவல்நிலையத்திற்கு நகையை அடையாளம் காட்ட சென்றபோது எதிரிகள் இருவரும் காவல் நிலையத்தில் இருந்ததாகவும், அப்போது போலீசார் தன்னிடம் இந்த எதிரிகள்தான் உன்னிடம் செயினை பறித்து சென்றார்கள் என்று அடையாளம் காட்டியதாகவும், தான் காவல்நிலையம் சென்றபோது, கோபி, மூர்த்தி, சுந்தரராமன், மணிகண்டன், சீனிவாசன், ஆறுமுகம், கே.ஆர். சரவணன், வி.கே.குமார் ஆகியோர்கள் தன்னுடன் வந்ததாகவும், அவர்களிடமும் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கி கொண்டதாகவும், அவர்கள் தனது உறவினர்களும், நண்பர்களும் என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.1ன் சாட்சியத்திலிருந்து போலீசார் எதிரிகளை அடையாளம் காட்டியுள்ளனர் என்பதும், சாட்சிகள் அனைவரும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துள்ளனர் என அறியமுடிகிறது.

3. அடுத்தபடியாக அரசு தரப்பில் அசா.2, 5 சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அசா.2 தனது சாட்சியத்தில் "கடந்த 24.01.2021

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:04:10 +0000

அன்று இரவு 9.40 மணியளவில் ஆட்டுக்காரத்தெருவில் ஜெயபால் மளிகைகடை முன்பாக தானும் தனது பெரிய மகனும் நடந்து சென்றுகொண்டு இருந்தாகவும், தங்களுக்கு முன்பாக தன் மனைவியும் தங்கள் இளைய மகனும் நடந்து சென்றுகொண்டு இருந்ததாகவும், எதிர் திசையில் இருந்து பைக்கில் இரண்டு நபர்கள் வந்ததாகவும், பைக்கிற்கு பின்னால் உட்கார்ந்து இருந்த நபர் தனது மனைவி அணிந்திருந்த 3 1/2 பவுன் தங்க செயினை பறித்து சென்றதாகவும், தன் மனைவி சத்தம் போட்டதாகவும், தானும் அந்த பகுதியில் இருந்த மக்களும் அந்த இருசக்கர வாகனத்தை பின் தொடர்ந்ததாகவும், ஆனால் அவர்கள் வேகமாக சென்றுவிட்டதாகவும், ஆஜர் எதிரிகளில் பச்சை நிற சட்டை அணிந்து இருப்பவர் (கார்த்திகேயன்) தன் மனைவி கழுத்தில் இருந்து செயினை பறித்தவர் என்றும், பைக்கை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரிகளில் வெள்ளை கருப்பு நிற கோடுபோட்ட சட்டை அணிந்து இருப்பவர் என்றும் (ஹரிபிரபு) அவர்களை பிடிக்க முடியவில்லை என்றும், பின்னர் தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலையம் சென்று புகார் அளித்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா.2 ன் குறுக்கு விசாரணையில் "தாங்கள் புகார் கொடுக்க சென்றபோது, கோபி, மூர்த்தி, சுந்தரராமன், மணிகண்டன், சீனிவாசன், ஆறுமுகம், கே.ஆர். சரவணன், வி.கே.குமார் ஆகியோர்கள் தங்களுடன் வந்ததாகவும், அவர்களிடமும் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கி கொண்டதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.2 ன் சாட்சியத்திலிருந்து சாட்சிகள் அனைவரும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துள்ளனர் என அறியமுடிகிறது. மேலும் அசா.1, அசா.2 ன் மனைவி எனத்தெரிகிறது.

S T
KANIMOZHI

Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:04:16 +0000

4. அடுத்தபடியாக அசா.5 தனது சாட்சியத்தில் "கடந்த 24.01.2021 அன்று இரவு 9.40 மணியளவில் ஸ்டார் கல்யாண மண்டபம் அருகே நின்று கொண்டு இருந்ததாகவும், அப்போது தன் அக்கா அ.சா.1 சத்தம் போட்டதாகவும், அருகே சென்று பார்த்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் தனது அக்கா அணிந்திருந்த தங்க செயினை பறித்து சென்றுவிட்டதாக கூறியதாகவும், தான் செயினை பறித்துச் சென்ற நபர்களை பின் தொடர்ந்ததாகவும், அவர்கள் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்றுவிட்டதாகவும், தான் அவர்களை சரியாக பார்க்கவில்லை என்றும், பின்னர் கிழக்கு காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார் அளித்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.5 ன் சாட்சியத்திலிருந்து சம்பவ சமயத்தில் எதிரிகளை பார்க்கவில்லை என அறியமுடிகிறது. மேலும் அசா.1, அசா.5 ன் அக்கா எனத்தெரிகிறது.

5. அடுத்தபடியாக அரசு தரப்பில் அசா.3, 4 சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அசா.3 தனது சாட்சியத்தில் "24.01.2021 அன்று கும்பகோணத்தில் இருந்து அ.சா.1 ம் அவரது கணவர் அவர்களது மகனுடன் தன் வீட்டிற்கு வந்ததாகவும், அப்போது ஆட்டுக்காரத் தெருவில் ஜெயபால் மளிகை கடை முன்பாக நடந்து வந்து கொண்டு இருந்தபோது இரவு 9.40 மணியளவில் எதிர் திசையில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் தனது மகள் கழுத்தில் அணிந்து இருந்த 3-1/2 பவுன் தங்க செயினை பறித்து சென்றுவிட்டதாக தனக்கு போன் செய்து கூறியதாகவும், தான் அப்போது வீட்டில் இருந்ததாகவும், தான் சம்பவ இடத்தில் சென்று பார்த்தபோது கூட்டமாக இருந்ததாகவும், பின்னர் காவல்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:04:21 +0000

நிலையத்திற்கு தகவல் தெரிவித்ததாகவும், தனது மகள் கிழக்கு காவல் நிலையம் சென்று புகார் அளித்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.3 ன் சாட்சியத்திலிருந்து சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டதாக மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா.1, அசா.3 ன் மகள் எனத்தெரிகிறது.

6. மேலும் அசா.4 தனது சாட்சியத்தில் "24.01.2021 அன்று இரவு 9.30 மணியளவில் தான் வீட்டில் இருந்தபோது தனது அக்கா மேனகா தனக்கு போன் செய்து தனது மகள் சுபாஷினி கும்பகோணத்தில் இருந்து தஞ்சாவூர் வந்தபோது தொம்பன் குடிசையில் இறங்கி ஆட்டுக்காரத் தெருவில் நடந்து வந்து கொண்டிருந்தபோது டிரான்ஸ்பார்மர் அருகில் எதிர் திசையில் இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து சுபாஷினியின் கழுத்தில் அணிந்து இருந்த 3-1/2 பவுன் தங்க செயினை அறுத்துச்சென்றுவிட்டதாக கூறியதாகவும், பின்னர் சுபாஷினி காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.4 ன் சாட்சியத்திலிருந்து சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டதாக மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சம்பவம் பற்றி அசா.4 னிடம் போலீசார் விசாரிக்கவில்லை என அறியமுடிகிறது.

7. அடுத்தபடியாக அரசு தரப்பில் அசா.6, 7 பார்வை மகசர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அசா.6 தனது முதல் விசாரணையில் "கடந்த 25.01.2021 அன்று காலை 07.00 மணியளவில் ஜெயபால் மளிகை கடை அருகே தானும் தன் நண்பர் குமாரும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது அந்த இடத்தில் நகை திருட்டு போனது சம்மந்தமாக கேள்விப்பட்டதாகவும், கிழக்கு காவல்நிலைய போலீசார் அந்த

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.04.29 17:04:26 +0000

இடத்தில் வந்து விசாரணை செய்து கொண்டிருந்ததாகவும், தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டதாகவும், தான் கையொப்பம் செய்ததாகவும், தன்னுடன் குமாரும் கையெழுத்து செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா.3 ன் குறுக்கு விசாரணையில் "தான் பார்வை மகசரில் காவல்நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.6 ன் சாட்சியத்திலிருந்து பார்வை மகசர் சம்பவயிடத்தில் தயார் செய்யப்படாமல் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு அசா.6 டம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என அறியமுடிகிறது.

8. மேலும் அசா.7 தனது முதல் விசாரணையில் "கடந்த 24.01.2021 அன்று தான் வீட்டில் இருந்தபோது இரவு 9.00 மணியளவில் வீட்டின் வெளியே சத்தம் கேட்டதாகவும், தான் வெளியே சென்று பார்த்தபோது செயினை அறுத்துச் சென்றதாக கூறியதாகவும், மறுநாள் காலை 7.00 மணியளவில் ஜெயபால் என்பவரின் கடை முன்பாக தானும், தன் நண்பர் சரவணனும் நின்று பேசிக்கொண்டு இருந்ததாகவும், அப்போது கிழக்கு காவல் நிலைய போலீசார் விசாரணை செய்து கொண்டு இருந்ததாகவும், தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டதாகவும், தான் கையொப்பம் செய்ததாகவும், தன்னுடன் சரவணன் கையொப்பம் செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.7 ன் சாட்சியத்திலிருந்து போலீசார் கேட்டுக்கொண்டதற்காக சாட்சி கையொப்பம் செய்துள்ளார் எனத்தெரிகிறது.

10. மேலும் அசா.8 ஆக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு. ராமதாஸ காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் "கடந்த 24.01.2021 ம் தேதி தஞ்சை

S T KANIMOZHI
Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:04:31 +0000

கிழக்கு காவல்நிலைய குற்ற எண்.81/2021 சட்டபிரிவு.392 இதசவின் கீழ் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன் விசாரணைக்காக தனது பார்வைக்கு வைத்ததாகவும், மேற்கண்ட வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 25.01.2021ம் தேதி காலை 7.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடமான தஞ்சை ஆட்டுமந்தை தெரு ஜெயபால் மளிகை அருகில் சாட்சிகள் முன்பாக பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததாகவும், பின்னர் சம்பவயிட சாட்சிகளை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், கடந்த 30.01.2021ம் தேதி மதியம் 13.00 மணியளவில் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் தொம்பன்குடிசை ஆவின்பால் பூத் அருகில் வாகன தணிக்கை செய்தபோது அவ்வழியாக சந்கேத்திற்கு இடமாக வந்த வழக்கின் 1வது எதிரி பதிவு எண் இல்லாத இருசக்கர வாகனத்தில் வந்தபோது அவரை நிறுத்த முற்பட அவர் போலீசாரை கண்டு தப்பிக்க முற்பட எதிர்பாரா விதமாக கீழே விழுந்து லேசான காயத்துடன் இருந்தவரை உடனடியாக முதலுதவி செய்து விசாரிக்க அவர் எவ்வித அச்சுறுதலும், துன்புறுதலும் ஆசை வார்த்தைகளும் இன்றி தானாக, தன்னிசையாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தனிநபர் சாட்சிகள் முன்பாக பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரியின் கையொப்பம் பெற்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. மேலும் அசா.8 ன் சாட்சியத்தில், எதிரி தாமாக முன்வந்து தனது பாக்கெட்டில் வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்த வழக்கின் தடயபொருளான 3-1/2 சவரன் தங்க செயினை அதே சாட்சிகள் முன்பாக மகசர் தயார் செய்து 14.30 மணியளவில்

S T
KANIMOZHI
Digitally signed by S T
KANIMOZHI
Date: 2026.04.29 17:04:36 +0000

தொம்பன் குடிசை ஆவின் பால் பூத் அருகில் கைப்பற்றியதாகவும், 14.45 மணியளவில் அவர் வைத்திருந்த பதிவு எண் இல்லாத இருசக்கர வாகனத்தை தஞ்சை கிழக்கு காவல் நிலைய குற்ற எண்.81/2021 வழக்கின் தடயசொத்து என்பதால் அதை தனியாக அதே சாட்சிகள் முன்பு மற்றொரு மகசர் தயார் செய்ததாகவும், 1வது எதிரி மற்றும் வழக்கின் தடயசொத்துடன் காவல்நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்னர் கைப்பற்றபட்ட வழக்கின் தடயசொத்தை நீதிமன்றத்திற்கு படிவம்- 95 மூலமாக அனுப்பி வைத்ததாகவும், சிபி நம்பர் 14/2021, பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் மற்றொரு எதிரியான ஹரிபிரபு என்பவரை 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தஞ்சை மேற்கு காவல்நிலைய குற்ற எண்.94/2021 சட்டபிரிவு.379 இதச வழக்கில் 08.02.2021ம் தேதி தஞ்சை நகர துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அனுமதி பெற்று கும்பகோணம் கிளைச்சிறையில் இருந்தவரை சம்பிரதாய கைது செய்தும், PT வாரண்ட் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததாகவும், கடந்த 10.02.2021ம் தேதி வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து அன்றைய தினமே வழக்கின் எதிரிகள் மீது இதச பிரிவு.392ன் படி நீதிமன்றத்தில் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

12. மேலும் அசா.8ன் குறுக்கு விசாரணையில் "கைப்பற்றுதல் மகசரில்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:04:40 +0000

எதிரியின் கையொப்பம் இல்லை என்றும், சாட்சிகள் யாரும் தேதியிட்டு கையொப்பம் செய்யவில்லை என்றும், 30.01.2021 அன்று கைப்பற்றப்பட்ட வழக்கின் தடயபொருள் நீதிமன்றத்தில் 08.02.2021 அன்று ஒப்படைக்கப்பட்டது என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.8 ன் சாட்சியத்திலிருந்து கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்பதும், மகசர் சாட்சிகள் தேதி குறிப்பிட்டு கையொப்பம் செய்யவில்லை என்பதும், 30.01.2021 அன்று கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் 9 நாட்கள் கழித்து காலதாமதமாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதற்கான காரணத்தையும் அறிக்கையாக சமர்ப்பிக்கவில்லை என்பதும் தெளிவாக புலனாகிறது.

13. மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27 ன் கீழ் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகள் அரசு தரப்பில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். 1. எதிரிகள் போலீசாரின் பாதுகாப்பில் இருந்திருக்க வேண்டும். அந்த காவல் கைது செய்த பின்பாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. Chandra Prakash Vs State of Rajastan 2014 (4) Supreme 646, 2. வாக்குமூலம் கொடுக்கும் நபர்கள் குற்றம் செய்த நபர்களாக இருக்க வேண்டும். 3. அவர்கள் கொடுக்கும் வாக்குமூலம், ஒப்புதல் வாக்குமூலமாகவோ அல்லது தகவலாக கூட இருக்கலாம். 4. மேற்படி, தகவலின் பேரில் புதிதாக ஒரு சங்கதிகள் தெரியவந்திருக்க வேண்டும் மேற்படி, கூற்றுகளை பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் மேற்கோள் காட்டியுள்ளது. மேற்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே அந்த ஒப்புதல் வாக்குமூலமானது ஏற்றுக்கொள்ளதக்கது என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Sanjay Dutt VS St of Mahastra, through CBI (STR) AIR

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.04.29 17:04:46 +0000

2013 SC 2687 என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது.

14. மேலும், இந்திய சாட்சிய சட்ட பிரிவு 114 ஆதாரச் சட்டத்தின் (a) விளக்கத்தின் கீழ், மேற்கண்ட உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை பார்க்கும் போது, திருட்டு சம்பவம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும், குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் வெறும் சந்தேகத்தின் பேரில் பிடிபட்டார்கள், என்ற கருத்தில், எந்த அனுமானமும் இல்லை. வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் நேரில் பார்த்தவர்கள் யாரும் இல்லை என்பது தெளிவாகிறது.

15. இந்நிலையில் இதச பிரிவு 390 வரையறையை காணும்போது **"திருட்டைச் செய்வதன் பொருட்டு அல்லது திருட்டினால் பெற்ற பொருளை எடுத்துச் செல்வதில் அல்லது எடுத்துச்செல்ல முயல்வதில், குற்றவாளிகள் அது நிறைவேறுதற்காக, எவருக்கேனும் மரணம் அல்லது காயம் அல்லது முறையின்றித் தடுத்தல் அல்லது உடனடி மரணம், உடனடி காயம் அல்லது உடனடி முறையற்ற தடுத்தல் ஏற்படும் என்ற அச்சத்தைத் தன்னிச்சையாக விளைவித்தால் அல்லது விளைவிக்க முயன்றால், திருட்டானது கொள்ளை ஆகும்.**

**குற்றவாளிகள் அச்சுறுத்திப் பறிக்கும் தருணத்தில் அச்சங்கொள்ளச் செய்யப்பட்டவரோடு உடன் இருந்தால் மற்றும் அவரை அவருக்கு அல்லது வேறு ஒருவருக்கு உடனடி மரணம், உடனடி காயம் அல்லது உடனடி முறையற்ற தடுத்தல் ஏற்படுமென்று அச்சம் கொள்ளச் செய்து அச்சுறுத்திப் பறித்தல் மற்றும் அவ்வாறு அச்சங்கொள்ளச் செய்து அவ்வாறு அச்சங்கொள்ளச்**

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:04:51 +0000

**செய்யப்பட்டவரை அச்சுறுத்திப் பறிக்கும் பொருளை அந்த இடத்திலேயே அப்பொழுதே கொடுத்துவிடுமாறு தூண்டினால் அச்சுறுத்திப் பறித்தலானது கொள்ளை ஆகும்"** என குறிப்பிடப்பட்டுள்ளது.

16. இந்நிலையில் அசா.1 முதல் அசா.8 சாட்சிகள் அசா.1 னிடம் அச்சுறுத்தி கழுத்திலிருந்த தங்கசெயினை அறுத்து சென்ற நபர்கள் எதிரிகள்தான் என சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அசா.2 முதல் 7 வரையானவர்கள் அசா.1ன் உறவினர்கள் என்பதும், காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளார்கள் எனவும் அறியமுடிகிறது. மேலும் பசா.6, 7 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளுக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் அனுப்பியும், பதிவுத்தபால் அனுப்பியும், அவர்கள் மேற்படி முகவரியில் இல்லை என கிராம நிர்வாக அலுவலரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் வழக்கின் ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என அறியமுடிகிறது. இந்நிலையில் எதிரிகள் தான் அசா.1 னிடமிருந்து தங்கசெயினை அறுத்துச்சென்றுள்ளார்கள் என்பது சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் நிரூபிக்கும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.7 சாட்சியம் அளிக்கவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

IX) இறுதியாக சந்தேகத்தின் பலனை 2 வது எதிரிக்கு அளித்து 2 வது எதிரியை இ.த.ச. சட்டப்பிரிவு. 392 ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து, 2 வது எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:04:55 +0000

17. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருளுக்கான உத்தரவு இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வழக்கான சிசி எண்.209/2026 வழக்கில் பகரப்படும் என உத்தரவிடப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.04.29 17:05:03 +0000

நீதித்துறை நடுவர் எண்.I,

தஞ்சாவூர்.

**<u>அரசு தரப்பு விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>:**

அ.சா.1 -- திருமதி. சுபாஷினி (புகார்தாரர்)

அ.சா.2 -- திரு. கோபி

அ.சா.3 -- திரு. மூர்த்தி

அ.சா.4 -- திரு. சாந்தாராமன்

அ.சா.5 -- திரு. மணிகண்டன்

அ.சா.6 -- திரு. சரவணன்

அ.சா.7 -- திரு. குமார்

அ.சா.8 -- திரு. ராமதாஸ் (காவல் ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24.01.2021 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 25.01.2021 | பார்வை மகசர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.3 | 24.01.2021 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.8 |
| அ.சா.ஆ.4 | 25.01.2021 | மாதிரி வரைபடம் | அ.சா.8 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.5 | 30.01.2021 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.8 |
| அ.சா.ஆ.6 | 30.01.2021 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.8 |
| அ.சா.ஆ.7 | 30.01.2021 | படிவம் - 91 (சிபி எண்.14/2021) | அ.சா.8 |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்கள்**:

அசாபொ.1 - தங்கசெயின்

அசாபொ.2 - நகைக்குண்டான புகைப்படம்

அசாபொ.3 - வட்டடத்தகடு

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**- இல்லை.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:05:11 +0000

நீதித்துறை நடுவர் எண்.I,

தஞ்சாவூர்.

<u>குறிப்பு</u>:

1) வழக்கு விசாரணையின் போது எதிரி ஜாமீனில் இருந்தார்.

2) எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.